2019 பிப்ரவரி 11]

செயற்பொறியாளர் அவர்களால் இந்தத் தூண்டில் பாலத்தினை நீட்டிப்பதற்கு ரூபாய் 26 கோடியே 75 இலட்சம் மற்றும் இறங்கு தள வசதிகளுக்காக ரூபாய் 28 கோடியே 50 இலட்சம் செலவில் மொத்தம் ரூபாய் 55 கோடியே 25 இலட்சத்தில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. எனவே, மீனவர்களின் கஷ்டத்தை உணர்ந்து, நிச்சயமாக அரசு நல்ல முடிவை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

45—

மகளிர் கலைக் கல்லூரி

***6393—திரு. க.நா. விஜயகுமார்**:

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வடக்குப் பகுதியில் மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வாய்ப்பு தருகிறேன், இருங்கள். வாய்ப்பு தந்து கொண்டுதான் இருக்கிறேன்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் வடக்குப் பகுதியில் மகளிர் கலைக் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.*

[2019 பிப்ரவரி 11

திரு. க.நா. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். திருப்பூர் வடக்கு தொகுதியில் தொழிலாளர்களின் நலன்களைக் காத்திடும் வகையில், திருப்பூர் மக்களுக்குப் பெருமை சேர்த்திடும் வகையில் 100 படுக்கை வசதிகளுடன்கூடிய இ.எஸ்.ஐ. மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டிய மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும், தொழிலாளர்களின் பாதுகாவலராக விளங்கக்கூடிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்ற வாரம் 8 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில், திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் உழைக்கும் பெண்கள் தங்கும் விடுதியைக் காணொலிமூலம் தனது பொற்கரங்களால் திறந்து வைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதியில் சுமார் பத்து இலட்சம் மக்கள் வசிக்கிறார்கள். இது தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. ஏழையெளிய மக்கள் அங்கு குடியிருந்து வருகிறார்கள். அந்த வகையிலே பெண் குழந்தைகள் அதிகம் உள்ள தொகுதியாகும். அந்தத் தொகுதியில் வசிக்கும் மாணவிகள் உயர் கல்வி கற்பதற்காக பல கிலோ மீட்டர் தொலைவிற்குச் செல்ல வேண்டியுள்ளது. மேலும், திருப்பூர் மாவட்டத்தில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்றது. இதன் காரணமாகவும் மாணவிகள் உயர் கல்வி கற்பதற்காகக் கல்லூரிக்குச் செல்ல முடியாத நிலை உள்ளது. எனது சட்டமன்றத் தொகுதியில் கல்லூரி ஏதுமில்லை. மேலும், மேல்நிலைப் பள்ளிகள் அங்கே அதிகமாக இருக்கின்ற காரணத்தால், ஏழை மாணவியரின் நலன் கருதி, திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதியில் புதிதாக அரசு மகளிர் கலைக் கல்லூரி ஒன்றை அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2019 பிப்ரவரி 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதி திருப்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் 6; அரசு நிதி உதவி பெறும் கல்லூரி 1; சுய நிதி கல்லூரிகள் 14 என மொத்தமாக 21 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் திருப்பூர் மாவட்டத்தில் இயங்கி வருகின்றன. அந்த வகையில் பார்க்கின்றபோது, சிக்கன்னா அரசு கலைக் கல்லூரியானது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற சட்டமன்றத் தொகுதியிலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. திருப்பூரில் மகளிருக்கென தனியாக எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்று அமைந்துள்ளது. அந்தக் கல்லூரியானது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சட்டமன்றத் தொகுதியிலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. அதற்கு அடுத்ததாக பார்த்தோம் என்றால், அவினாசியில் இருக்கின்ற அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற சட்டமன்றத் தொகுதியிலிருந்து 14 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. அதேபோல, பல்லடம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற சட்டமன்றத் தொகுதியிலிருந்து 19 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. அதேபோல, காங்கேயத்தில் அமைந்துள்ள கல்லூரியானது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற சட்டமன்றத் தொகுதியிலிருந்து 39 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. அங்கிருக்கக்கூடிய மாணாக்கர்களுடைய சேர்க்கைக்குத் தேவையான அளவிற்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் இருப்பதனாலும், திருப்பூரை மையமாகக் கொண்டு மகளிருக்கென்று தனியாக கல்லூரி ஒன்று ஏற்கெனவே இயங்கி வருகின்ற காரணத்தினாலும், மகளிருக்கென்று தனியாக, புதிதாக கல்லூரி அமைக்க வேண்டிய தேவை தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.*

திரு. க.நா. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 10 இலட்சம் தொழிலாளர்கள் திருப்பூர் மாநகரத்தில் வசித்து வருகிறார்கள். தொழிலாளர்களின் நலன் காக்கும் இந்த அரசு, தொழிலாளர்களுடைய குழந்தைகளின் நலன் கருதி, திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதியில் மகளிர் கலைக் கல்லூரி ஒன்றை அமைத்தால், வெளி மாநிலங்களிலிருந்தும், வெளி மாவட்டங்களிலிருந்தும் வருகை புரிந்து வேலை செய்கின்ற பெண்களுக்கு ஏதுவாக இருக்கும் என்பதைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதியில் மகளிர் கலைக் கல்லூரி ஒன்றை அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்வரும் காலங்களில் மாணவிகளுடைய சேர்க்கைக்குத் தேவையான வகையில் மகளிருக்கென்று தனியாக கல்லூரி ஒன்றை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று இங்கே கோடிட்டுக் காட்டியிருக்கிறார். ஆனால், இப்போது பார்க்கின்றபோது, திருப்பூரில் இயங்கிவரும் 6 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணாக்கர்களுடைய சேர்க்கைக்காக ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் 4,152; அதில் மாணாக்கர்களுடைய சேர்க்கை 3,809; ஏற்கெனவே ஒப்பளிக்கப்பட்டுள்ள இடங்களில் 343 இடங்கள் காலியாக உள்ளன. அதேபோல, அரசு நிதி உதவி பெறும் கல்லூரிகளிலும் 293 இடங்கள் இன்றைக்கு காலியாக உள்ளன. மேலும், சுயநிதி கலைக் கல்லூரிகளில் மாணாக்கர்களுடைய சேர்க்கைக்காக ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் 12,884; மாணவர்களுடைய சேர்க்கை 6,938. ஆகவே, அந்தக் கல்லூரிகளிலும் மாணவர்களுடைய சேர்க்கை முழுமையாகப் பூர்த்தியாகவில்லை. ஒப்பளிக்கப்பட்ட இடங்களில், 5,946 இடங்கள் இன்றைக்கு காலியாக இருக்கின்றன.

ஆகவே, எதிர்வருகின்ற காலங்களில், உயர் கல்வி பயில விரும்பும் மாணவர்கள் அனைவரும் உயர் கல்வி பயில்கின்ற வகையில் அரசானது நடவடிக்கை எடுத்து வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய தலைமையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிற அரசு மாண்புமிகு

2019 பிப்ரவரி 11]

அம்மா அவர்களுடைய வழியில் நடைபெறும் அரசு என்பதை நிரூபிக்கின்ற வகையிலேதான், மாணாக்கர்களுடைய சேர்க்கை சதவிகிதம் இந்திய அளவில் 25.8 சதவிகிதமாக இருந்தாலும்கூட, தமிழகம் 48.6 சதவிகிதத்தை பெற்று, இன்றைக்கு முதலிடத்தில் இருக்கின்றது. அந்த வகையில் கல்லூரிகளில் சேர்க்கைக்காக விண்ணப்பிக்கின்ற மாணாக்கர்கள் அனைவரையும் சேர்க்க வேண்டுமென்பதற்காக ஒப்பளிக்கப்பட்ட இடங்களிலிருந்து கூடுதலாக 20 சதவிகித இடங்களில் மாணாக்கர்களை சேர்த்த காரணத்தினால் அனைவரும் உயர் கல்வி பயிலக்கூடிய நிலை இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், திருப்பூர் மாநகரம் தொழிலாளர்கள் நிறைந்த பகுதி என்று குறிப்பிட்டு, மகளிருக்கென்று தனியாக கலைக் கல்லூரி ஒன்றை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்றைக்கு இங்கே கோரிக்கை ஒன்றை வைத்திருக்கின்றார்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் திருப்பூர் வடக்கு பகுதியில் ஒரு புதிய மகளிர் கலைக் கல்லூரி தொடங்குவது குறித்து தேவைக்கேற்ப ஆராய்ந்து, மாண்புமிகு அம்மா அவர்களின் வழி தொடரும் இந்த அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து அவர்கள்.*

திரு. வி.எஸ். காளிமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்கு மகளிர் கலைக் கல்லூரி அமைக்க வேண்டும் என்று கடந்த மூன்று ஆண்டுகளாக மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொண்டிருக்கிறேன். எங்களது மாவட்ட அமைச்சர் அவர்களும் இதற்குப் பரிந்துரை செய்துள்ளார்கள். எங்களது பகுதியில் I.T.I.-க்கு பக்கத்தில் 10 ஏக்கர் இடம் உள்ளது, அதுபோல் நூற்பாலைக்குச் சொந்தமான 60 ஏக்கர் நிலமும் உள்ளது. எனவே, இந்த இடங்களை ஆய்வு செய்து, கல்லூரி அமைக்கக் கேட்டுக்கொள்கிறோம். தற்போது மாணவியர் கல்லூரிகளுக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால் 40 கி.மீ. தூரமுள்ள பழனி அல்லது காங்கேயம் பகுதிகளுக்குச் செல்ல வேண்டிய நிலை*

உள்ளது. மேலும், அங்குள்ள விடுதிகளில் தங்கிப் படிப்பதற்கு மாணவியர்களுக்கு இடமும் கிடைப்பதில்லை. பேருந்துகளில் தினசரி வந்து செல்வதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. விசேஷ நாட்களில் கல்லூரிக்குச் செல்லும் மகளிர் பேருந்துகளில் பயணம் செய்வது மிகவும் சிரமமாக உள்ளது. மேலும், எங்களது தொகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதி. ஆதி திராவிடர்கள் அதிகமாக வாழும் தொகுதி. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மனமுவந்து எங்களுக்கு இந்த ஆண்டு கலைக் கல்லூரியினை அமைத்துத் தருமாறு மிகவும் மன்றாடி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையையெல்லாம் கருத்தில்கொண்டுதான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011-ல் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தபிறகு, உயர் கல்வித் துறையின் மூலமாக புதிதாக 65 கல்லூரிகளைத் தோற்றுவித்தார்கள். அதில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மட்டும் 45 தோற்றுவிக்கப்பட்டன. அந்த வழியில் இன்றைக்கு தமிழகத்தில் ஆட்சி செய்துகொண்டிருக்கின்ற தமிழகத்தினுடைய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் கடந்த 2017-2018 ஆம் கல்வி ஆண்டில் 8 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை அரசு கல்லூரிகளாகவும், 3 கல்லூரிகளை உறுப்புக் கல்லூரிகளாகவும், 11 கல்லூரிகளை முழுமையாக அரசு கல்லூரிகளாகச் செயல்படும் வகையில் தோற்றுவித்துள்ளார்கள். ஒட்டுமொத்தமாக பார்க்கின்றபோது, இந்திய அளவிலே தமிழகத்தில் மாணாக்கர்களின் சேர்க்கை சதவிகிதத்தினை உயர்த்திக் காட்டுகின்ற அளவில் தேவையான கல்லூரிகளையும், புதிய பாடப் பிரிவுகள் என்று எடுத்துக்கொண்டால் 1,585 புதிய பாடப் பிரிவுகளையும் தோற்றுவித்துள்ளார்கள். அதன் மூலமாக இன்றைக்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் படிக்கக்கூடிய மாணவர்களின் எண்ணங்களை ஈடேற்றுகின்ற வகையில் இந்த அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய தொகுதியில் புதியதாக மகளிர் கல்லூரி அமைக்க வேண்டும் என்று கேட்டுள்ளார்கள். இருப்பினும், இன்று அத்துணை பேருமே உயர் கல்வி பயில்கின்ற சூழ்நிலையை உருவாக்குகின்ற அரசாக மாண்புமிகு அம்மா அவர்களின்*

2019 பிப்ரவரி 11]

அரசு திகழ்ந்துகொண்டிருக்கின்ற காரணத்தினால், எதிர்வரும் காலகட்டங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் பகுதியிலே தேவைக்கேற்ப அரசானது ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.*

திரு. கே.எஸ். தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் சந்தனப் பேழையில் நீங்கா துயில் கொண்டிருக்கும் தங்கத் தலைவி, தானைத் தலைவி, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியை நடத்திக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அருமை அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் மற்றும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்கி வினாவைத் தொடங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுப் பகலவன், வெண்தாடி வேந்தர், பெண்ணுரிமை காத்த தந்தை பெரியார் பிறந்த மண்ணில் ஈரோடு கிழக்குத் தொகுதியில் ஒரு மகளிர் கல்லூரி அமைத்துக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்வதோடு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு ஒரு கேள்வி போதும். உட்காருங்கள். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஈரோட்டினை மையமாகக் கொண்டு பெண்களுக்கென்று ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தோற்றுவிக்கப்படுமா என்று கோரிக்கை வைத்துள்ளார்கள். ஏற்கெனவே, ஈரோடு பகுதியில் 3 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 5 அரசு உதவிபெறும் கல்லூரிகளும், 14 சுயநிதிக் கல்லூரிகளும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்தவகையில், மாணாக்கர்களின் தேவைக்கேற்ப இன்றைக்கு அந்தப் பகுதியில் உள்ள கல்லூரிகள் போதுமானதாக இருக்கின்றன.*

எதிர்வரக்கூடிய காலகட்டங்களில் அவர் சார்ந்திருக்கின்ற பகுதியில் மாணாக்கர்களின் சேர்க்கையின் அடிப்படையில், அங்கு பெறப்படுகின்ற விண்ணப்பங்களின் அடிப்படையில், அந்தப் பகுதியில் கலைக் கல்லூரியையோ அல்லது புதிய பாடப் பிரிவுகளையோ தேவைக்கேற்ப ஏற்படுத்தித் தருவதற்கு ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

46—

அங்கன்வாடி மையக் கட்டடம்

***20759—திரு. க. அன்பழகன்**:

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், தாராசுரம் பேரூராட்சி, கலைஞர் காலனியில் உள்ள அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையினை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் சட்டமன்றத் தொகுதி, தாராசுரம் பேரூராட்சிக்குட்பட்ட கலைஞர் காலனியில் உள்ள அங்கன்வாடி மையத்திற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு அவ்விடத்தில் ரூ.8,50,000/- மதிப்பீட்டில் சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.